S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208
# உள்ளாட்சி அரசு
தினசரி தமிழ் காலை நாளிதழ்
"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்
youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் ஜனவரி 01 * 2025 * மலர் -1 * இதழ்-214* VOL-1 * ISSUE-214 விலை ரூ.3 * பக்கம் -4

# ஜனவரி 6-ஆம் தேதி அமைச்சரவைக் கூட்டம்!



## ★முதல்வர் ஸ்டாலின் முக்கிய முடிவு எடுக்கிறார்;
## ★ஆளுநர் உரை, பட்ஜெட் தயாரிப்பது குறித்தும் ஆலோசனை!!

சென்னை, ஜன.1–

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான ஓய்வூதியம் குறித்து முடிவு செய்ய ககன்தீப்சிங்பேடி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்த குழு அதன் அறிக்கையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் நேற்று சமர்ப்பித்தது. அது குறித்து ஆராய ஜனவரி 6–ஆம் தேதி அமைச்சரவை கூட்டம்நடக்கஉள்ளது. மேலும் சட்டசபைக் கூட்டம் நடக்க இருப்பதால் ஆளுநர் உரை தயாரிப்பது குறித்தும், இடைக்கால பட்ஜெட் குறித்தும் முதலமைச்சர் விவாகதிக்க உள்ளார்.

தமிழ்நாட்டில் சுமார் 9 லட்சம் அரசு ஊழியர்கள் உள்ளனர். இவர்களில் ஆசிரியர்களும் அடங்குவர். இவர்களில் 2003–ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ஆம் தேதிக்கு முன்னர் அரசுப் பணிகளில் சேர்ந்தவர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அதன்பிறகு, அரசுப் பணிகளில் சேர்ந்தவர்களுக்கு, அந்த ஊழியர்களின் பங்களிப்புடன்கூடிய புதிய ஓய்வூதியத்திட்டம் நடைமுறைப்பட்டது. இந்த பங்களிப்பு தொகை எல்.ஐ.சி. முதலீடு செய்யப்பட்டது.

இதற்கிடையே ஒருங்கிணைந்த ஓய்வூதியம் என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. ஆனால், பழைய ஓய்வூதியத்திட்டத்தையே செயல்படுத்த வேண்டும் என்று அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வலியுறுத்தி வருகிறார்கள்.

இதையடுத்து, பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம், ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றை ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஊரக வளர்ச்சித் துறைச் செயலர் ககன்தீப் சிங் பேடி தலைமையில் குழு அமைக்கப்பட்டு, 9 மாதங்களில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. இந்தக் குழு அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கருத்துகளை கேட்டறிந்து, கடந்த அக்டோபர் மாதம் இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்தது. ஆனால், அரசு ஊழியர்சங்கங்கள்போராட்டக் களத்தில் குதித்ததால், அவர்களுடன் அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். எனினும், உடன்பாடு எட்டப்படவில்லை. இந்நிலையில், ஓய்வூதியத் திட்டங்கள் குறித்த அறிக்கையை குழுத் தலைவர் ககன்தீப் சிங் பேடி, முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேற்று சமர்ப்பித்தார். இக்குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்து, விரைவில் தமிழக அரசின் ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அறிவிப்பை முதல்வர் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில் இந்த அறிக்கை குறித்து ஆராய முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் ஜனவரி 6–ஆம் தேதி அமைச்சரவைக் கூட்டம் நடக்க உள்ளது. இந்த கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படும் என தெரிகிறது.

பொங்கல் பண்டிகை முடிந்து ஜனவரி 20–ஆம் தேதி சட்டசபைக் கூட்டம் தொடங்க உள்ளது. ஆண்டின் முதல் கூட்டம் என்பதால் ஆளுநர் உரை நிகழ்த்துவார். அந்த உரையை தமிழக அரசே தயாரித்துக் கொடுக்கும்.

அந்த உரையை தயாரிப்பது குறித்து ஆலோசிக்கப்படுகிறது. மேலும் பிப்ரவரியில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்படும். அது குறித்தும் விவாதிக்கப்படுகிறது. மேலும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், துப்புரவுப் பணியாளர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அது தொடர்பாகவும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப் படும் என எதிர்பார்க்கப் படுகிறது.





சென்னையில் அ.தி.மு.க. மாவட்டச்செயலாளர்கள் கூட்டம், பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் இன்று நடந்தது. அருகில் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருவதை யொட்டி முன்னேற்பாடு பணிகளை அமைச்சர் சக்கரபாணி ஆய்வு செய்தார். அருகில் கலெக்டர் சரவணன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப், செந்தில்குமார் எம்.எல்.ஏ., வருவாய் அலுவலர் ஜெயபாரதி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் கீர்த்தனாமணி உள்பட பலர் உள்ளனர்.




நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ளவீர, வீராங்கனைகளுக்குடாக்டர்கலைஞர்விளையாட்டுஉபகரணங்களைகலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார். அருகில் உதவி இயக்குநர் மணிகண்டன், உதகை நகர்மன்ற தலைவர் வாணீஸ்வரி, நகர்மன்ற துணை தலைவர் ரவிக்குமார், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அலுவலர் இந்திரா உள்பட பலர் உள்ளனர்.



வத்தலகுண்டு அருகே ஆர்.காமாட்சிபுரம் பகுதியில் வாழை கன்றுகள் பயிரிடப்பட்டுள்ளன.

## வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம்
## முதியவர் ரெயில் முன் பாய்ந்து தற்கொலை!

கொல்கத்தா ,ஜன.1

மேற்கு வங்கத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம் செய்யப்பட்டதால் மனமுடைந்த 82 வயது முதியவர் ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்காளத்தின் புருலியா மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு தீவிர திருத்தம்

விசாரணைக்கு ஆஜராக வேண்டிய சில நாட்களுக்கு முன்பு, ஓடும் ரெயிலின் முன் குதித்து முதியவர் ஒருவர் தற்கொலை செய்துள்ளார்.

டிசம்பர் 16 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 82 வயதான துர்ஜன் மஜ்ஹியின் பெயர் இடம்பெறவில்லை, அதைத் தொடர்ந்து விசாரணைக்கு ஆஜராகுமாறு அவருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. உயிரிழந்தவர் புருலியா மாவட்டத்தைச் சேர்ந்த துர்ஜன் மாஜி ஆவார். இவர் சாந்தால் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர். திங்களன்று ஓடும் ரெயிலின் முன்பு குதித்து அவர் தனது உயிரை மாய்த்துக்கொண்டார். சமீபத்தில் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் இடம் பெறவில்லை. 1943ல் பிறந்த அவர், 2002ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இருந்தார்.

ஆனால் தற்போது பெயர் நீக்கப்பட்டதால், விசாரணைக்கு ஆஜராக அவருக்கு வாகன வசதி கிடைக்காதாலும், தனது குடியுரிமை மற்றும் வாக்களிக்கும் உரிமை பறிபோய்விடுமோ என்ற அச்சத்தாலும் அவர் மிகுந்த மன ஊளைச்சலில் இருந்ததாக அவரது மகன் தெரிவித்துள்ளார். இந்த நடைமுறை ஏழை மக்களைத் துன்புறுத்துவதாகவும், இதுவரை சுமார் 60 பேர் இதனால் உயிரிழந்துள்ளதாகவும் முதல்வர் மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, 85 வயதுக்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள்மற்றும்நோயாளிகளைநேரடி விசாரணைக்கு அழைக்க வேண்டாம் தேர்தல் ஆணையம் புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது.



திருப்பூரில் சேகரமாகும் குப்பைகளை கல்குவாரி குழியில் கொட்டுவதால் நிலத்தடி நீர் மாசுபட்டு விவசாயம் பாதிக்கப்படுவதாக கூறி முதலிபாளையம் நல்லூர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு சார்பில் காய்கறிகள் மாலை அணிந்து விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினரும், குழுத்தலைவருமான வி.எஸ்.மாதேஸ்வரன் தலைமையில் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் நடந்தது. உடன் கலெக்டர் துர்காமூர்த்தி, எம்.எல்.ஏ.க்கள் ராமலிங்கம், ஈஸ்வரன் ஆகியோர் உள்ளனர்.

## சேலம் கலெக்டர் அலுவலகத்தில் பெண் தீக்குளிப்பு!

சேலம் ஜன.1



சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், திடீரென்று பெண் ஒருவர் தன் மீது மண்ணெண்ணெய் ஊற்றி பற்றவைத்துக் கொண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், வழக்கம்போல ஊழியர்கள் பணிக்கு வந்து கொண்டிருந்தனர். தங்களது குறைகளை தெரிவிக்கவும், அலுவலகப் பணி மேற்கொள்ளவும், பொதுமக்களும் சிலர் வந்தனர். இந்நிலையில், போர்டிகோ அருகே திடீரென்று பெண் ஒருவர், தன் பையில் வைத்திருந்த மண்ணெண்ணையை ஊற்றிக்கொண்டு ஆடையில் தீ வைத்துக் கொண்டார். இதனை பார்த்த அக்கம் பக்கத்தினர், தண்ணீர் ஊற்றி அணைத்தனர். தொடர்ந்து பாதுகாப்பில் இருந்த போலீசாருக்கு செய்தி தெரிவித்தனர். தகவல் அறிந்த காவலர்கள் சம்பவ இடத்திற்கு வந்து, அவரிடம் விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் அவர் வீராணம் அருகில் உள்ள மன்னார் பாளையத்தை சேர்ந்த லலிதா என்பது பெரிய வந்தது. அவருக்கு ஒரு பெண் குழந்தை உள்ளதும் தெரிய வந்தது. தனக்கு அடிக்கடி வலிப்பு நோய் வருவதாகவும்,தானும் தனது பெண்ணையும் காத்துக் கொள்ள, அரசிடம் இலவச வீட்டுமனை கோரி மனு வழங்கி வந்ததாகவும், பலமுறை நேரிலும், மனு வாயிலாகவும் கோரிக்கை வைத்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் இன்று ஆட்சியரை நேரில் சந்தித்து, மீண்டும் தனது குறைகளை தெரிவித்து,உதவி கேட்க வேண்டும் வந்த தன்னை செக்யூரிட்டி தர குறைவாக பேசி வெளியே தள்ளியதாகவும், அதனால் மனம் உடைந்த தான் தற்கொலை செய்யப் போவதாக அவரிடம் தெரிவித்தாலும், அதற்காக அவர் இறந்துவிட்டால் எடுத்துச் செல்ல வண்டி உள்ளது என்று கூறியதாகவும், அதனால் தான் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டு தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

இதனை அறிந்த மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள், அவரை சமாதானப்படுத்தி சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். இதனால் ஆட்சி அலுவலகம் பரபரப்பாக காணப்பட்டது



## ஈரோட்டில் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி தொடக்கம்: 30% தள்ளுபடி விற்பனைக்கு அமைச்சர்கள் அழைப்பு!

ஈரோடு, ஜன.01

ஈரோடு செட்டிபாளையம், அவல்பூந்துறை ரோட்டில் உள்ள ஏ.எம்.மஹாலில், மத்திய ஜவுளித்துறை அமைச்சகத்தின் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசு கைத்தறித் துறை சார்பில் மாநில அளவிலான கைத்தறி கண்காட்சி (30.12.2025) தொடங்கியது. வரவிருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சியை, வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் கந்தசாமி ஆகியோர்கள் இணைந்து இன்று காலை 10.00 மணியளவில் ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கேற்றித் துவக்கி வைத்தனர்.

இக்கண்காட்சியில் ஈரோடு, காஞ்சிபுரம், சேலம், திருநெல்வேலி, நாகர்கோவில், திருப்பூர், கடலூர், கோயம்புத்தூர் உள்ளிட்ட தமிழகத்தின் 17 மாவட்டங்களைச் சேர்ந்த 116 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பங்கேற்றுள்ளன. மேலும், ஈரோடு கோஆப்டெக்ஸ் நிறுவனம், நெசவாளர் சேவை மையம், பூம்புகார் விற்பனை நிலையம், காதி கிராம தொழில் வாரியம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) மற்றும் வெளிமாநில கைத்தறி நிறுவனங்களின் ஸ்டால்கள் என மொத்தம் 60 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் காஞ்சிபுரம், திருபுவனம், ஆரணி பட்டுச் சேலைகள், கோரா சேலைகள், படுக்கை விரிப்புகள், ஜமக்காளங்கள், மேட், துண்டுகள், வேட்டிகள் மற்றும் லுங்கிகள் போன்ற பல்வேறு ரகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியின் சிறப்பம்சமாக, விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து கைத்தறி ஜவுளி ரகங்களுக்கும் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட 30 சதவீத சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. 14 தினங்களுக்கு நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் ரூ.2.00 கோடி அளவிற்கு விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரும் ஜனவரி 12 ஆம் தேதி வரை தினமும் காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பொதுமக்களின் பார்வைக்காக இக்கண்காட்சி செயல்படும். தமிழகத்தின் பாரம்பரிய நெசவுக் கலைகளைப் போற்றும் வகையிலும், நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, பொதுமக்கள் அதிக அளவில் கலந்து கொண்டு சலுகை விலையில் துணிகளை வாங்கிப் பயனடையுமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.



## யாக்கோபுபுரத்தில் பெண்களுக்கான மாநில அளவிலான மின்னொளி கபடி போட்டி! முன்னாள் எம்.பி. சௌந்தரராஜன் துவக்கி வைத்தார்!!

நெல்லை, ஜன.01

நெல்லை மாவட்டம் ராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பழவூர் அருகேயுள்ள யாக்கோபுபுரத்தில் பெருந்தலைவர் காமராஜர் நற்பணி மன்றம் சார்பில் நடத்தப்பட்ட இரண்டாம் ஆண்டு மாநில அளவிலான பெண்களுக்கான மின்னொளி கபடி போட்டியை அதிமுக நெல்லை புறநகர் மாவட்ட பொருளாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பல்கலைகழக கபடி விளையாட்டு வீரருமான சௌந்தரராஜன் வீராங்கனைகளை அறிமுகம் செய்து வைத்து போட்டியினை துவக்கி வைத்தார். இந்தப் போட்டியில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 30க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்றன. இந்த போட்டியில் ஆனது நாக் அவுட் முறையில் நடைபெறுகிறது. இந்த போட்டியில் வெற்றி வரும் அணிக்கு முதல் பரிசாக 25 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக பதினைந்தாயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக ஏழாயிரம் ரூபாயும் வழங்கப்படுகிறது. போட்டி ஏற்பாடுகள் பெருந்தலைவர் காமராஜர் நற்பணி மன்ற தலைவர் முத்துராஜ், செயலாளர் வேல்முருகன் தலைமையில் செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் மாவட்ட எம்ஜிஆர் மன்ற தலைவர் தாமோதரன், யோக்கோபுபுரம் தெற்கு கிளை செயலாளர் தங்கராஜ், வடக்கு கிளை செயலாளர் கிறிஸ்து ஏசுதாசன், மாறன்குளம் கிளைகழக செயலாளர் தங்கதுரை, நிர்வாகிகள் ஆசீர் மனோகரன், குமரேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியினை சுற்று வட்டாரத்தை சேர்ந்த ஏராளமான பார்வையாளர்கள் கண்டு ரசித்தனர்.




தமிழக காங்கிரஸ் கமிட்டியின் தலைமை இடமான சென்னை சத்தியமூர்த்தி பவனில் 2026 சட்டமன்ற தேர்தலில் விருதாச்சலம் தொகுதியில் ரயில்வே போர்டு உறுப்பினர் சேலம் கோட்டம் வர்த்தக பிரிவு மாவட்ட தலைவர் மணிகண்டன். தமிழக காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகளிடம் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்குமாறு விருப்ப மனு தாக்கல் செய்தார் உடன் வேலுமணி. வடக்குத்து சாக்கே. முருகன். வேலு. உள்ளிட்டோ உடன் இருந்தனர்.

## பத்திரம் எழுதுவோர் சங்க புதிய நிர்வாகிகள் பதவியேற்பு!

### அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு வாழ்த்தினார்!!



மேலூர், ஜன.01

மதுரை பதிவு மாவட்டம் பத்திரம் எழுதுவோர் சங்க புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா மதுரை தமிழ்நாடு ஹோட்டலில் நடைபெற்றது.

மேலூர் பத்திர எழுத்தர் செல்வராஜ் வரவேற்புரையாற்றினார். மாவட்ட தலைவர் சுந்தரம் தலைமை தாங்கினார்.

மாவட்ட செயலாளர் கைலாஷ் சங்கர், மாவட்ட பொருளாளர் அசோக் பாபு, மாநில செயற்குழு உறுப்பினர் சுந்தர வடிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, தமிழ்நாடு ஊராட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் கருணாகரன், தமிழ்நாடு பத்திர எழுத்தர் சங்கத்தின் மாநில தலைவர் எஸ்.பத்மநாபன், வேளாண்மை துறை வெள்ளலூர் ஆசிரியர் பாலசுப்பிரமணியன், திருவாதவூர் வழக்கறிஞர் பொன்னையா ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மதுரை பதிவு மாவட்ட பத்திரம் எழுதுவோர் சங்க மாவட்ட தலைவர் யூ. ராஜமாணிக்கம், மதுரை பதிவு மாவட்ட பத்திரம் எழுதுவோர் சங்க மாவட்ட செயலாளர் ஏ.வாசுதேவன், மதுரை பதிவு மாவட்ட பத்திரம் எழுதுவோர் சங்க மாவட்ட பொருளாளர் டி.பாஸ்கரன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக பதவி ஏற்றினர்.

இதில் தமிழ்நாடு பத்திர எழுத்தர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் ஜி. கண்ணன், மாநில பொருளாளர் முத்துக்குமார், மாநில செயல் தலைவர் ஆர். முருகேசன், மாநில தகவல் தொடர்புச் செயலாளர் சிவ சங்கரராமன், மாநில சங்க சட்ட ஆலோசகர் முருகன், முன்னாள் அமைப்புச் செயலாளர் சிதம்பரநாதன், மாநில துணைப் பொதுச் செயலாளர் மோகன், மற்றும் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## வாணியம்பாடியில் தமிழ்நாடு நீதியின் செங்கோல் அமைப்பு சார்பில் போதை ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு!

வாணியம்பாடி, ஜன.01

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி புதூர் பகுதியில் இயங்கி வரும் தமிழ்நாடு நீதியின் செங்கோல் அமைப்பு சார்பில் போதை ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு அமைப்பின் தலைவர் திருநங்கை முனைவர் பி.ஈஸ்வரி தலைமை வகித்தார். மக்கள் தொடர்பாளர் கிரிஜா ராஜேஷ் முன்னிலை வகித்தார். மாநில மக்கள் தொடர்பாளர் ராஜேஷ் குமார் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு விருந்தினராக காமராஜர் அறக்கட்டளை நிறுவனரும், கொடையாஞ்சி ரெட் கிராஸ் தலைவர் விஜய் கலந்து கொண்டு போதை ஒழிப்பு குறித்துபேசினார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட சமூக நலத்துறை அலுவலர்(மகளிர் உரிமை துறை)சுமதி, வாணியம்பாடிகாவல்துணைகண்காணிப்பாளர்



பி.மகாலக்ஷ்மி ஆகியோர் கலந்து கொண்டு போதை பொருட்களால் ஏற்பாடு தீமைகள் குறித்தும், அதனை ஒழிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி சிறப்புரையாற்றினர். தொடர்ந்து ஏழை எளிய மக்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கு நல திட்ட உதவிகளை வழங்கினர்.

நிகழ்ச்சியில் அமைப்பின் செயலாளர் தமிழரசன், துணை செயலாளர் கலையரசி, இளைஞரணி அமைப்பாளர் திலீப்குமார் உட்பட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் பொருளாளர் சிவசங்கரி நன்றி கூறினார்.



## திருப்பத்தூரில் மத்திய அரசை கண்டித்து ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் உண்ணாவிரத போராட்டம்!

திருப்பத்தூர், ஜன.01

திருப்பத்தூர் மாவட்டத்தில் மத்திய அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டித்து, ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் 50க்கும் மேற்பட்ட ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் பெயரை மாற்றியதுடன், அந்த திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை மத்திய அரசு வெகுவாக குறைத்துள்ளதாக போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டினர். இதனால் கிராமப்புற ஏழை, எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், வேலை வாய்ப்பு குறைந்து வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி வருவதாகவும் அவர்கள்தெரிவித்தனர். மேலும், ஊரக வேலை உறுதி திட்டம் தொடர்பாக கொண்டு வரப்பட்ட புதிய சட்டம் மக்கள் நலனுக்கு எதிரானதாக இருப்பதாக கூறிய சங்க நிர்வாகிகள், அந்த சட்டத்தை உடனடியாக திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்தினர். கிராமப்புற வளர்ச்சி, வேலை வாய்ப்பு உருவாக்கம், சமூக சமத்துவம் ஆகியவற்றுக்கு அடித்தளமாக விளங்கும் இத்திட்டத்தை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளை மத்திய அரசு கைவிட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த உண்ணாவிரத போராட்டத்தின் போது, ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட மற்றும் மாநில நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். அவர்கள் பேசுகையில், "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. இந்த திட்டத்தின் பெயர் மாற்றமும், நிதி குறைப்பும் சமூக நீதிக்கு எதிரானது"என தெரிவித்தனர். மேலும், ஊரக வளர்ச்சித் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் பணிச்சுமை அதிகரித்து வருவதாகவும், தேவையான நிதி மற்றும் வளங்கள் இல்லாததால் பணிகளை திறம்பட செயல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இதனால் அரசு திட்டங்களின் பயன் நேரடியாக மக்களை சென்றடைய முடியாத சூழல் உருவாகி வருவதாகவும் கூறினர். போராட்டம் அமைதியான முறையில் நடைபெற்ற நிலையில், மத்திய அரசு உடனடியாக தனது முடிவுகளை மறுபரிசீலனை செய்து, ஊரக வேலை உறுதி திட்டத்திற்கான முழுமையான நிதியை ஒதுக்க வேண்டும் என சங்கம் சார்பில் வலியுறுத்தப்பட்டது. கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில், எதிர்காலத்தில் தொடர் போராட்டங்களில் ஈடுபடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.






## ராமநாதபுரம் கலெக்டர் ஆபீஸ் வளாகத்தில் ஊரக வளர்ச்சி துறை பணியாளர்கள் உண்ணாவிரதம்!

ராமநாதபுரம், ஜன.01

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பெயரை மாற்றியதுடன் திட்டத்திற்கான நிதி வெகுவாக குறைத்த மத்திய அரசின் மக்கள் விரோத போக்கை கண்டித்தும்,புதியசட்டத்தைதிரும்பப்பெறவலியுறுத்தி

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில்

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் இன்று நடந்தது. தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்க மாவட்டத்தலைவர் பரமசிவம் தலைமை வகித்தார். மாவட்ட செயலர் காசிநாத துரை, பொருளாளர் அருண் முன்னிலை வகித்தனர். மாநில துணைத்தலைவர் சோமசுந்தர் தொடங்கி வைத்தார். அரசு ஊழியர் சங்க மாவட்டதலைவர்விஜயராமலிங்கம், மாவட்டசெயலர் அப்துல் நஜ்முதீன்,

ஓய்வூதியர் கூட்டமைப்பு தலைவர் முருகேசன், நிர்வாகி விஜயராகவன், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி அலுவலர் சங்க மாவட்ட துணைத்தலைவர் சிவனு உள்பட பலர் கோரிக்கையை வலியுறுத்தி பேசினர்.

## பண்டிகை கடன்களில் டிஜிட்டல் எளிமை, வேகத்திற்கு தென் இந்தியா முன்னுரிமை: பைசா பஜார் ஆய்வு!

சென்னை , ஜன.01

தென் இந்திய மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் கேரளாவில், பண்டிகை கால தனிப்பட்ட கடன்கள் பெறும் போது வட்டி விகிதத்தை விட வேகமான கடன் வழங்கல் மற்றும் முழுமையான டிஜிட்டல் அனுபவத்திற்கு நுகர்வோர் அதிக முன்னுரிமை அளிப்பது, பைசா பஜார் மேற்கொண்ட சமீபத்திய ஆய்வு தெரிவிக்கிறது. இந்த ஆய்வு தென் இந்தியாவின் 18 நகரங்களில் இருந்து 1,700 பேர் பதில்களை அடிப்படையாகக் கொண்டது. ஆய்வின் படி, 41% பேர் முன் அனுமதிக்கப்பட்ட மற்றும் உடனடி கடன் சலுகைகள் விரும்பியுள்ளனர்; 24% பேர் முழுமையாக டிஜிட்டல் கடன் செயல்முறையை முன்னுரிமை செய்துள்ளனர். வீட்டு புதுப்பிப்பு மற்றும் அலங்காரம் (39%), கடன் ஒருங்கிணைப்பு (27%) மற்றும் பண்டிகை கொள்முதல் (14%) ஆகியவை பண்டிகை கடன்களுக்கு முக்கிய காரணங்களாக இருந்தன. மேலும், 35% பேர் ₹3 முதல் ₹5 லட்சம் வரையிலான கடன்களைத் தேர்வு செய்துள்ளனர். இதுகுறித்து பைசா பஜார் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சந்தோஷ் அகர்வால் கூறுகையில், "பண்டிகை காலத்தில் நுகர்வோர் தனிப்பட்ட கடன்கள் அவசிய தேவைகளுக்கு மட்டுமல்லாமல், வாழ்க்கை முறை மற்றும் ஆசைச் செலவுகளுக்கும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். எளிமையான, வெளிப்படையான மற்றும் முழுமையாக டிஜிட்டல் செயல்முறைகள் மூலம் கடன்களை பெற விரும்பும் மனநிலை இந்தியாவின் கடன் சூழல் முதிர்ச்சி அடைந்து வருவதை காட்டுகிறது" என்றார்.

## "இதே தருணம் சரியான நேரம் – கனவுகளைக் கடக்கும் அனுபவம், விசிட் மலேசியா 2026!"

சென்னை, ஜன.01



டூரிசம் மலேசியா சென்னை 2025ஆம் ஆண்டு தென் இந்தியாவில் முன்னணியில் நிறைவு செய்து, வரவிருக்கும்விசிட் மலேசியா ஆண்டு 2026 (VMY 2026)க்கு உற்சாகமாக தயாராகியுள்ளது. கடந்த ஆண்டு 234 முக்கிய நடவடிக்கைகள், 125 வணிகக் கலந்துரையாடல்கள், 42 ஊக்குவிப்பு பிரச்சாரங்கள், 31 ஊடக மற்றும் பொது உறவு திட்டங்கள் மற்றும் 36 பிராண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் மலேசியாவின் சுற்றுலா ஈர்ப்பு இந்திய சந்தையில் மேலும் வலுப்படுத்துவது. 148 நேரடி விமானங்கள் மற்றும் வாரந்தோறும் 25,668 இருக்கைகள் மூலம் மலேசியா இந்திய பயணிகளுக்கு எளிதாக அணுகக்கூடிய தலமாக மாறியுள்ளது. டூரிசம் மலேசியா சென்னை இயக்குநர் திரு. ஹிஷாமுடின் முஸ்தபா "எங்களின் இந்திய சந்தை அர்ப்பணிப்பு தளர்வற்ற தாக உள்ளது.

2026ஆம் ஆண்டில் 20 லட்சம் இந்திய பயணிகளை வரவேற்க குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார். B2B முயற்சிகள், சைக்கிள் நிகழ்வுகள், நுகர்வோர் தள்ளுபடிகள், ரோட்ஷோ க்கள் மற்றும் டிஜிட்டல் பிரச்சாரங்கள் போன்ற பல நடவடிக்கைகள் மூலம் VMY 2026 சுற்றும் ஆற்றல் அதிகரித்து வருகிறது. வலுவான கூட்டுறவு மற்றும் தொடர்ச்சியான உற்சாகத்துடன், சுற்றுலா மலேசியா சென்னை 2026ஆம் ஆண்டை வெற்றிகரமாகவும் தாக்கமுள்ள அனுபவமாகவும் வழங்கத் தயாராக உள்ளது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

# புதுக்கோட்டை அருகே தனியார் பஸ் - லாரி மோதி விபத்து!

## 8 பேர் படுகாயம்; போலீஸ் விசாரணை!





புதுக்கோட்டை,ஜன.01

புதுக்கோட்டை அருகே சத்திய மங்கலம் மேலூர் அருகே திருச்சி காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை யில் சென் னையில் இருந்து ராமேஸ்வரம் நோக்கி சென்ற தனியார்பேருந்து முன்னேசென்ற டிப்பர் லாரியை முந்தி செல்ல முயன்ற போது லாரியில் மோதி விபத்து,

இந்த விபத்தில் லாரி சாலை யோர பள்ளத்தில் கவிழ்ந்த நிலை யில் பேருந்தில் பயணித்த 8 பேர் காயம், இரண்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் காயமடைந்தவர்களை தீயணைப்புத் துறையினர் மற்றும் போலீசார் மீட்டு மருத்துவம னையில் சிகிச்சைக்காக அனும தித்துள்ளனர்.

சென்னையிலிருந்து ராமேஸ்வ ரம் நோக்கி 41 பயணிக ளை ஏற் றிக்கொண்டு தனியார் பேருந்து புதுக்கோட்டை அடுத்த சத்திய மங்கலம் மேலூர் அருகே சென்ற போது எம் சாண்ட் ஏற்றிக் கொண்டு முன்னே சென்ற டிப்பர் லாரியை முந்த முயன்ற போது விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் லாரி சாலை யோர பள்ளத்தில் கவிழ்ந்தது. மேலும் பேருந்தின் ஒரு பகுதி முழுமையாக சேதமடைந்த நிலையில் பேருந்தில் பயணித்த 8 பேர் காயமடைந்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத் திற்கு விரைந்து சென்ற வெள்ள னூர்காவல்துறை யினர்மற்றும்சிப்காட்தீயணைப்பு துறை வீரர்கள் காயமடைந்தவர் களை மீட்டு இரண்டு 108 ஆம்பு லன்ஸ்கள் மூலம் சிகிச்சைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவம னைக்கு அனுப்பி வைத்தனர்.

அதிகாலையில் திருச்சி காரைக் குடி தேசிய நெடுஞ்சா லையில் நடந்த விபத்து சம்பவத்தால் அந்த சாலை முழுவதும் கண்ணாடி துகள்கள் கொட்டி கிடைப்பதால் அவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் சிரமம் அடைந்து வரு கின்றனர்.

மேலும் காவல்துறையினர் விபத்துக்குள்ளானவாகனங்களை அப்புறப்படுத்தும் பணியில் ஈடு பட்டுவருகின்றனர். இந்தவிபத்து சம்பவம்குறித்துவெள்ளனூர்போ லீசார் வழக்கு பதிவு செய்து விசா ரணை மேற்கொண்டு வருகின்ற னர்.



கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற விழாவில் ரூ. 9.67 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட உலகத்தரத்திலான அதிநவீன ஹாக்கி மைதானம் உள்பட ரூ. 162.62 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 107 திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ. 31.72 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 10,626 பயனாளிகளுக்கு ரூ. 136.44 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.



# ஓசூர் சார் ஆட்சியாளரிடம் விற்பனை பத்திரத்தின் மூலம் மோசடி செய்த நிலத்தை மீட்டுத் தரக்கோரி குடும்பத்துடன் மனு!

கிருஷ்ணகிரி ,ஜன.01

கிருஷ்ணகிரி மாவட்டம் பி எஸ் திம்மச்சந்திரம் கிராமம் மேற்கே அஞ்சல் சூளகிரி வட்டத்தில் வசிக்கும் மாதேவ ரெட்டி என்பவர் விவசாயம் செய்து வந்த நிலையில் குடும்ப செல்வதற்காக பன்னார்கட்டா முனிராஜ் என்பவரிடம் கடந்த 2015 ல் (sales agreement) சேல்ஸ் அக்ரிமெண்ட் மூலமாக 12 லட்சம் வாங்கி பிரச்சனைகளை தீர்வு செய்தார் அதன் பின்பு மூன்று வருடத்திற்கு அகிர்மென்ட் போடப்பட்டிருந்த நிலையில் 2017 ஆம் ஆண்டு முனிராஜ் உடைய நண்பருக்கு ஸ்ரீநாத் என்பவரிடம் பத்திரத்தை மாற்றி வைத்து அதற்கு 2,75,000 ரூபாய் காசோலை மூலமாக பெற்றுக் கொண்டேன் எனக்கு தெரியாமல் sale deed விற்பனை பத்திரம் மூலம் என்ன எழுதிக் கொண்டார் என்று கூட எனக்கு தெரியவில்லை தற்போது கேட்டால் நிலம் என்னுடையது என்று கூறுகிறார். அதனைத் தொடர்ந்து மாதவரத்தில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துஉள்ளார்அதனைத்தொடர்ந்து டிசம்பர் 25ஆம் தேதி ஸ்ரீநாத் என்பவர் ஜேசிபி உடன் வந்து நிலத்தில் செடி வைப்ப தற்காக வந்து உள்ளார்.

அதனைதடுத்து நிறுத்த முயன்ற போது கொலை மிரட்டல் விடுத்துள்ளார் எனக்கு என்னுடைய நிலத்தை மீட்டு தர கோரி சர ஆட்சியாளரிடம் மனு கொடுத்தனர்.



# கொடைக்கானல் பேருந்து நிலையத்தில் தினசரி உலா வரும் காட்டெருமைகள்!

கொடைக்கானல்,ஜன.01

கொடைக்கானல் பிரதான பேருந்து நிலையத்தில் தினசரி கன்றுகளுடன் உலா வரும் காட்டெருமை கூட்டங்களால் பொதுமக்கள் டூரிஸ்ட்கள் அச்சமடைந் துள்ளனர்.

நகரை ஒட்டிய வனப்பகுதிகளில் சிறுத்தை, காட்டெருமை, மான், காட்டுப் பன்றி போன்ற வனவிலங்குகளும், அரிய வகை பறவைகளும் வசிக்கின்றன.

தற்போது வனவிலங்குகளுக்கான உணவு சங்கிலி அழிந்துள்ள நிலையில் உணவை தேடி காட்டெருமைகள் நகர் மற்றும் குடியிருப்பு, பேருந்து நிலையம் போன்ற இடங்களில் கூட்டமாக உலா வரும் நிலை தொடர்கின்றது. அவ்வப் போது பொதுமக்களை காட்டெருமை தாக்கும் சம்பவமும் நடக்கின்றது.

இந்நிலையில் பொதுமக்கள் மற்றும் டூரிஸ்ட்கள் அதிகம் கூடும் பிரதான பேருந்து நிலையத்தில் கன்றுகளுடன் உலா வந்த காட்டெருமைகளால் பொது மக்கள்மற்றும்டூரிஸ்ட்கள்அச்சமடைந்து பதுங்கினர்.

காட்டெருமை கூட்டங்களை அடர்ந்த வனப்பகுதிகளில் விரட்டவும், பொது மக்கள் மற்றும் டூரிஸ்ட்கள் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வனத்துறையினரை ஆர்வலர்கள் வலியு றுத்தியுள்ளனர்.



திருவள்ளூரில் பிரசித்தி பெற்றதும் 108 ஸ்தலங்களில் ஒன்றான ஸ்ரீ வைத்திய வீரராகவர் பெருமாள் சன்னதியில் வைகுண்ட ஏகாதசி முன்னிட்டு சிறப்பு பூஜை அலங்காரம் பக்தர்களுக்கு காலை பரமபத வாசல் வழியாக ஸ்ரீதேவி ஸ்ரீபூதேவி சமேதாரராக ஸ்ரீ வைத்திய வீரராகவர் காட்சியளித்து அருள் பாலித்தார் பரமபத வாசல் வழியாக திரளான பக்தர்கள் கண்டு களித்து இல்லம் சென்றனர் இதற்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் மத்திய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் பெயரை மாற்றியதையும் இந்த திட்டத்திற்கு மத்திய அரசு 60 சதவீதம், மாநில அரசு 40 சதவீதம் என புதிய சட்டத்தை இயற்றியதை கண்டித்து உண்ணாவிரத போராட்டம் மாவட்டதலைவர் பிரேம்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்த உண்ணாவிரத போராட்டத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் விஜயகுமார், துணை தலைவர்கள் இளையராஜா, கலையரசன், பாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மானாமதுரையில் பிரசித்தி பெற்ற வீரஅழகர் திருக்கோவில் சொர்க்கவாசல் திறப்பு விழா!



சிவகங்கை,ஜன.01

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை கரையில் அமர்ந்துள்ள ஸ்ரீ சௌந் தரவல்லி தாயார் சமேத சுந்தரராஜ பெரு மாள் ( வீர அழகர் கோவில் )கோவிலில் வைகுண்ட ஏகாதசி திருநாளை முன் னிட்டு சொர்க்கவாசல் திறப்பு விழா நடைபெற்றது முன்னதாக உற்சவர் சுந்தர ராஜ பெருமாள் தாயார்களுடன் சர்வ அலங்காரத்தில் எழுந்தருளினார் தொடர்ந்து சிற ப்பு பூஜைகள் நடை பெற்று நட்சத்திர தீபம் ஏக முக தீபம் மற் றும் ஷோடச உபசாரங்கள் நடைபெற்று வேத மந்திரங்கள் முழங்க மகா பஞ்சமுக கற்பூர ஆராதனை காண்பிக்கப்பட்டன இதனைத் தொடர்ந்து சொர்க்க வாசல் என்னும் பரமபத வாசல் கதவுக்கு அர்ச்ச கர் பூஜைகளை நடத்தி கற்பூர ஆராதனை காண்பித்தனர். பின்னர் பக்தர்களின் கோவிந்தா கோஷங்கள் முழங்க சொர்க்க வாசல் கதவு திறக்கப்பட்டது சொர்க்க வாசல் முன்பு நம்மாழ்வாருக்கு காட்சி கொடுத்தவுடன் பெருமாள் சொர்க்கவா சல் வழியாக கடந்து கோவில் பிரகாரம் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித் தார் இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுந்தர்ராஜ பெருமாளை வழி பட்டனர்.

# கந்தர்வகோட்டை கோதண்டராமர் திருக்கோவிலில் வைகுண்ட ஏகாதசி விழா!



கந்தர்வகோட்டை, ஜன.01

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர் வக் கோட்டை யாதவர் தெருவில் அமைந்துள்ள பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ கோதண்டராமர் திருக்கோவிலில் வைகுண்ட ஏகா தசி விழா பக்தர்கள் புடை சூழ பரம பத வாசல் திறக்கப்பட்டது. பரமபத வாசல் வழியாக ஸ்ரீ கோதண்டராமர் பெருமாள் எழுந்தருளி பக்தர்க ளுக்கு அருள் பாலித்தார். அது சம யம் கிராம பொதுமக்கள் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு பெருமாளை வழிபட்டனர்.



# கரும்பு டன்னுக்கு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும் ;விவசாயிகள் கோரிக்கை !

திருப்பத்தூர், ஜன.01

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் சிவ சௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கரும்பு டன்னுக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும், நெல்லுக்கு குறைந்தபட்சம் ஒரு டன்னுக்கு 3 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும், திருப்பத்தூர் மாவட்டத்தில் தென்னை விவசாயிகள் மற்றும் பனை வியாபாரிகளின் நலன் கருதி கள்ளு இறக்க அனுமதி வழங்க வேண்டும், மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் பேசினர்.

இதற்கு பதில் அளித்த பேசிய கலெக்டர் உங்களின் அனைத்து கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். இந்த கூட்டத்தில் மாவட்ட வன அலுவலர் மகேந்திரன், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அப்துல் ரகுமான் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வத்தலக்குண்டுவில் தே.மு.தி.க நிறுவன தலைவர் விஜயகாந்த் 2ம் ஆண்டு குருபுஜை விழா, அன்னதானம்!

வத்தலக்குண்டு, ஜன.01

வத்தலக்குண்டு கிழக்கு ஒன்றியத்தின் சார்பாக தே.மு.தி.க நிறுவனத்தலைவர் கேப்டன் விஜயகாந்தின் இரண்டாம் ஆண்டு குருபுஜை விழாவில் ஒன்றிய செயலாளர் மணிமுருகன் தலைமை ஏற் றார். சேவுகம்பட்டி பேரூர் கழக செய லாளர் மகாராஜன் முன்னிலையில் தே. மு.தி.க நிறுவனத்தலைவர் கேப்டன் விஜயகாந்தி ன் திருவுருவ படத்திற்கு மலர்தூவி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் சிறப்பா ளர்களாக மாநில தொழிற்சங்க துணைத் தலைவர் ஜவஹர், மாவட்ட செயலளர் மாசாணம், மாவட்ட துணை செயலாளர் ஜெர்மன்ராஜா மற்றும் அவைத்தலை வர் ராஜேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கண்ணன், பரமசாமி, ரவி முருகன், பாண்டி, ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்ட முடிவில் பொதுமக்களுக்கு பிரியாணி வழங்கி னார்கள்.



விழுப்புரம் மாவட்டம். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிதிட்டத்தின் பெயரை மாற்றியதோடு திட்டத்திற்கான மத்திய அரசின் நிதியினை வெகுவாக குறைத்துள்ள மத்திய பிஜேபி அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை கண்டித்தும், மசோதாவை திரும்பப் பெற வலியுறுத்தியும் மாநிலந்தழுவிய மாவட்ட தலைநகர் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

## கம்பத்தில் கிருஷ்ணா வேளாண்மை,தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் தேனீக்கள் வளர்ப்பிற்கு தேவையான உபகரணங்கள் பற்றி விளக்கம்!

கம்பம், ஜன.01

தேனி மாவட்டம் கம் பத்தில் கிருஷ்ணா வேளா ண்மை மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி மாணவி கள் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு தேனி வளர்ப்பிற்கு தேவை யான உபகரணங்கள் பற்றி விள க்கம் அளித்த னர் அதேபோல் தேனீ கூட்டத்தில் உள்ள உறுப் பினர்கள் ராணி தேனீ, ஆண் தேனீக்கள் மற்றும் வேலைக்கார தேனீக்கள் பற்றி விவரங்களும் கூறப் பட்டன மேலும் தினசரி செய்ய வேண்டிய பராம ரிப்பு பணிகள் தேனீக்கள் எதிரிகள் மற்றும் நோய் கள் அவற்றை எவ்வாறு க ட் டு ப் ப டு த் தி மேலாண்மை செய்வது என் ப தை யு ம் விவசாயிகளுக்கு விளக் கம் அளித்தனர்.

நடைபெற்ற புகைப் பட விளக்கத்தில் வேளாண் கல்லூரி மாண விகள் தமயந்தி, சுருதிகா, ஸ்ரீநிதி,

பிர்நாஸ் பர்வீன், அன்பு மொழி, மதுரஞ்சனா, ஷர் மிளா, ஆகியோர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரியில் இஸ்லாமியர்கள் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி நவநீத வேணு கோபால சுவாமி கோவில் முன்பு இந்து பக்தர்களுக்கு குடிநீர், குளிர் பானம்,பிஸ்கட்களை வழங்கினர்.

### கிருஷ்ணகிரியில் மத நல்லிணக்கம்:

## இந்து பக்தர்களுக்கு பிஸ்கட் - குளிர்பானம்!

### முஸ்லிம்கள் வழங்கினர்!!

கிருஷ்ணகிரி, ஜன. 1

கிருஷ்ணகிரி புதுப்பே ட்டை வடக்கு மாட வீதியில் அமைந்துள்ள நவநீத வேணுகோபால சுவாமி கோவிலில் நேற்று காலை வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சொர்க்க வாசல் திறப்பு நடந்தது. இதில், ஏராளமான பக்தர்கள் அதி காலை முதல் கலந்து கொண்டு நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். இந்நிலையில், மத நல்லிணக் கத்தை வலியுறுத்தி, மிலாடிநபி விழா குழு தலைவர் அஸ்லம் தலைமையில், கோவிலுக்கு வந்த, 2,000க்கும் மேற் பட்ட பக்தர்களுக்கு, குடிநீர் பாட்டில், குளிர்பானம், பிஸ்கெட் பாக்கெட் ஆகி யவை வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில், சிறப்பு அழைப்பாளராக நகர்மன்ற உறுப் பினர் வேலுமணி கலந்து கொண்டார்.

மேலும், மிலாடி நபி விழாக்குழு சார் பில், கராமத், ரியாஸ், ஜாமிர், சன்னி யுல்லா, பாசு, போண்டா ரியாஸ், ரியாஸ், ஷாஜகான், ஜாபிர், நூர், சுஹேல் மற்றும் இஸ்லாமிய இளைஞர்கள்கலந்து கொண் டனர்.

மதநல்லிணக்கத்தை வலியுறுத்தி மிலாடி நபி விழாக்குழுவினர் விநாயகர் சதுர்த்திக்கு ஏற்கனவே பூஜைப் பொருட் களை வழங்கி வருவது குறிப்பிடதக்கது.



நாகர்கோவிலில் இருந்து நெல்லை செல்லும் பைபாஸ் சாலை அருகே உள்ள நீர்த்தேக்கத்தில் தண்ணீர் பெருகி இருப்பதை படத்தில் காணலாம்.



தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கம் சார்பில் 100 நாள் வேலை திட்டத்துக்கான புதிய சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தி நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன் பால விநாயகம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

### தேசிய அளவில் தொடர்ந்து முதலிடம்:

## நாமக்கல் மண்டலத்தில் தினமும் 7.47 கோடி முட்டைகள் உற்பத்தி!

நாமக்கல், ஜன 1

நாமக்கல், சேலம், ஈரோடு, கோவை உள் ளிட்ட மாவட்டங்களை கொண்ட நாமக்கல் மண்டலத்தில் சுமார் மண்டலத் தில் 1.100க்கும்மேற்பட்ட கோழிப் பண் ணைகள் உள்ளன. ஒவ் வொரு பண்ணை யிலும் 50 ஆயிரம் முதல் 5 லட்சம் வரை முட்டைக்கோழிகள் வளர்க் கப்படுகின் றன. இந்தியாவி லேயே மிகக்குறைந்த பரப்பில் அதிக அளவில் கோழிகள் வளர்ப்பதில் நாமக்கல் மண் டலம் முதலி டம் வகிக்கிறது.

இந்தியாவின் முட்டை நக ரம் (எக் சிட்டி) என்று அழைக் கப்படும் நாமக்கல் மண்டலத் தில் கோழிப்பண்ணைகள் உயர் தொழில்நுட்ப முறை யில் அமைக் கப்பட்டு, குறிப் பிடத்தக்க அளவு ஏற்று மதி வளர்ச்சி என நவீன மாற்றங் களை சந்தித்துள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் வெளியான அடிப்படை/கால்நடை பராமரிப்பு புள்ளி விவரங்களின்படி இந்தியா வின் மொத்த முட்டை உற்பத் தியில் தமிழ்நாடு 19.98 சதவீதம் பங்களிப்பை அளித்து தேசிய அளவில் முதலிடத்தில் நீடிக் கிறது. இதை தொடர்ந்து ஆந்திரபிரதேசம் 12.91 சதவீதம் மற்றும் தெலுங்கானா 12.32 சத வீதம் பங்களிப்பில் உள்ளன.

தமிழ்நாட்டில் மொத்தமாக வளர்க்கப் படும்முட்டைகோழிகளின்எண்ணிக்கை சுமார் 8.79 கோடி என மதிப் பிடப்பட்டு உள்ளது. தற் போது நாமக்கல் மண்டலத் தில் மட்டும் தினசரி சுமார் 7.47 கோடி முட்டைகள் உற் பத்தியாகின்றன. இத னால் தேசிய அளவில் நாமக்கல் மண்ட லம் முட்டை உற்பத்தி யில் முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் தனிநபருக் கான முட்டை இருப்பு இந்த ஆண்டில் 317 முட்டைகளாக உயர்ந்து உள்ளது.

இது தேசிய சராசரியான 106 முட்டை களை விட மிக அதிகமாகும். கடந்த அக் டோபர் மாதம் வரை, இந்த ஆண்டில் நாமக் கல்லில் இருந்து சுமார் 139 கோடியே 62 லட்சம் முட்டைகள் ஏற்று மதி செய்யப்பட்டு உள்ளன. முந்தைய ஆண்டின் 78 கோடியே 64 லட்சம் என்ற எண்ணிக்கையை விட இது இரு மடங் காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படு கிறது என தேசிய முட்டை ஒருங்கிணைப் புகுழு தெரிவித்து உள்ளது



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியம் ஜெகதாப் கிராமத்தில் மானாவரி பயிரான ராகி நாற்றுகள் நடும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

## தமிழக கவர்னர் கோவை வருகை!

கோவை, ஜன.1–

தமிழக கவர்னர் ஆர்.என் ரவி நேற்று இரவுகார் மூல மாகமதுரையில்இருந்துகோவை வந்தார்,கோவைசுற் றுலா விருந்தினர் மாளிகையில்இரவில் தங்கினார்,

கவர்னர் ஊட்டிசெல்வதற்காக கோவை வந்துள்ள தாக தெரிகிறது, இன்று காலை கவர்னர் ஊட்டிக்கு புறப்பட்டுசென்றார். ஊட்டிசெல்லும்அவர் ஊட்டி யில் உள்ள ராஜ்பவன் மாளிகையில்தங்கி வரும் 4 ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) வரை ஐந்து நாட்கள் ஓய்வு எடுக்கிறார். ஆனால் நீலகிரிமாவட்டத்தில்இவர் அரசு மற்றும் தனியார் விழாக்களில் கலந்துகொள்வதுகு றித்து இது வரைஎவ்வித தகவலும் வெளியாக வில்லை,நாளை புத்தாண்டு கொண்டாடப்படும் நிலையில் இன்றுஅவர் ஊட்டி வருவதால்ஊட்டி ராஜ் பவன் மாளிகையில் குடும்பத்துடன் புத்தாண்டு கொண்டாட வாய்ப்புள்ளது.

கவர்னர் வருகையைமுன்னிட்டு ஊட்டிகோத்தகிரி சாலை கோத்தகிரிமேட்டுப்பாளையம் சாலை. ஊட்டி ராஜ்பவன் மாளிகை அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



கொடுமுடி மகுடேஸ்வரர்கோயில் வளாகத்தில் உள்ள வீரநாராயணப்பெருமாள் சன்னதியில் சொர்க்கவாசல் திறக்கப்பட்டு பெருமாள் கருடவாகனத்தில் பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

### பாப்பாரப்பட்டி அருகே

## பெருமாள் கோவிலில் சொர்க்கவாசல் திறப்பு விழா!

பாப்பாரப்பட்டி.ஜன.1

தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி அடுத்த வத்திமரதஅள்ளி கிராமத் தில் உள்ள ஸ்ரீ தேவி பூதேவி சமேத நித்திய கல்யாண ஸ்ரீநீவாச வெங் கடேச பெருமாள் கோவிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சுவாமிகளுக்கு அதிகா லையில் பால். நெய். தேன். சந்தனம். மஞ்சள் ஆகிய பொருட்கள் மூலம் அபிஷேகங்கள் செய்யப்பட்டுபிறகு ஏகா தசி பரணி நட்சத்திரம் சித் தயோகம் கூடிய சுப யோக சுபதினத்தில் விடிய காலை4.30 மணி அளவில் சுப்ரபாரதம் திருப்பள்ளி எழுச்சி மங் கல இசையுடன் ஸ்ரீதேவி பூதேவி சமேத நித்தியா கல்யாண ஸ்ரீனிவாச வெங்கடேசா பெருமாள் கோவிலில் ஏழு திரை நீக்கி பரமபத வாசலில் ஏகாதசி முன்னிட்டு சொர்க்கவாசல் நடை திறப்பு விழா நடைபெற் றது.அலங்கரிக்கப்பட்டு ஊஞ்சலில் அமர்ந்தவாறு



ஸ்ரீ வெங்கடேச பெரு மாள் ஸ்ரீதேவி பூதேவி சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி தந் தார்.

சொர்க்கவாசல் திறப்பு விழாவில் கலந்து கொண்ட பொதுமக்க ளுக்கு சாமிகள் படம் கொண்ட காலண்டர்.

லட்டு மற்றும் அன்ன தானம் வழங்கப்பட்டது. விழாவினை ஊர் பொது மக்கள் விழா குழுவினர் செய்திருந்தனர்.

### பாலக்கோடு அருகே

## 10-ம் வகுப்பு மாணவி தூக்கிட்டு தற்கொலை!

### உடலை மீட்டு போலீஸ் விசாரணை!!

பாலக்கோடு.ஜன.1

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு அடுத்த கொட்டா வூர் மாரியம்மன் கோயில் பகுதியில் வசிப்பவர் லாரி டிரைவர் முருகன், இவரது மனைவி முத்துலட்சுமி,இவர்களுடைய மகள் தமிழரசி (15)

பாலக்கோட்டில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள் ளியில் 10 ம் வகுப்பு படித்து வந்தார்.கடந்த ஒரு வருட மாக தமிழரசிக்கு உடல் நிலை பாதித்து அவதிபட்டு வந்தார்.இந்நிலையில் பல டாக்டரிடகளிடம் சிகிச்சை பெற்றும் குணமடையவில்லை. முருகனும், முத்துலட்சுமியும் வேலைக்கு சென்றிருந்த நிலையில் தமிரசிக்கு கடும் வயிற்று வலி ஏற்பட்டதாக தெரிகி றது,இதனால் விரக்தியடைந்த தமிழரசி வீட்டின் சீலிங் கில் இருந்த கொக்கியில் புடவையால் தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார்.

வேலை முடிந்து வந்த தாய் முத்துலட்சுமி கதவை தட் டியும் மகள் கதவை திறக்காததால் சந்தேகமடைந்து அக் கம் பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்த போது தமிழரசி தூக்கில் தொங்கிய நிலை யில் இறந்து கிடந்தது தெரிய வந்தது,

இது குறித்து தகவலறிந்த பாலக்கோடு போலீசார் தமி ரசியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த னர்.

மேலும் இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.







மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே குறவன்குளத்தில் தே.மு.தி.க. நிறுவனர் விஜயகாந்த் 2–ம் ஆண்டு குருபூஜையையொட்டி அவரது படத்திற்கு கட்சியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் தே.மு.தி.க. வடக்கு மாவட்ட செயலாளர் பாலசந்திரன், ராஜா, விஜயகுமார். ஆசிரியர் பால்சாமி, மூர்த்தி, பாலமுருகன், கணேசன், முத்தாயி உள்பட பலர் கலந்து கொண்டனர். பின்னர் பொதுமக்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## வாணியம்பாடியில் வாக்காளர் சரிபார்ப்பு பணி, பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம்!



வாணியம்பாடி, ஜன.1

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம் பாடி முஸ்லிம் பூர் வார்டு25 பூத் எண்:83 & 84 பகுதியில்.என்வாக்குசாவடி வெற்றி வாக்குச்சாவடி தமிழ்நாடு தலைகுனி யாத. என்ற தலைப்பில் வாக்காளர் சரி பார்ப்பு பணி மற்றும் பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் நகர கழக செயலாளரும் நகர மன்ற உறுப்பினருமான வி.எஸ்.சாரதி குமார், நகர திமுக பொறுப்பாளர் கே. கையாஸ் அஹ்மத் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர்.

நிகழ்வில் தேர்தல் பணி குழு ஒருங்கி ணைப்பாளர்கள் கே.தென்னரசு, நகர கழக நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், வார்டு செயலாளர், நகர மன்ற உறுப்பினர்கள், வார்டு கழக நிர்வா கிகள், BLA2, BDA, BLC நிர்வாகிகள் ஆகி யோர் கலந்து கொண்டனர்.



## பிக்கல்நாயக்கனஅள்ளி கிராமத்தில் திமுக சார்பில் என் வாக்கு சாவடி! வெற்றி வாக்கு சாவடி நிகழ்ச்சி!

தர்மபுரி,டிச.31

தர்மபுரி மாவட்டம்,ஜக்க சமுத்திரம் ஊராட்சி, பிக்கல்நாயக்கனஅள்ளி கிரா மத்தில் காரிமங்கலம் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் என் வாக்கு சாவடி !வெற்றி வாக்குச்சாவடி ! என்ற நிகழ்ச்சி காரிமங்க லம் மேற்கு ஒன்றிய செயலாளர் வழக்க றிஞர் கோபால் தலைமையில் நடந்தது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஹரிபிரசாத் வரவேற்று பேசினார்.

மாநில விவசாய அணி துணை செயலா ளர் சூடப்பட்டி சுப்ரமணி, தொகுதி பொறுப்பாளர் அரியப்பன், மத்திய ஒன் றிய செயலாளர் முனியப்பன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஜே.எம். சக்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஒவ்வொரு வாக்குச் சாவடியும் வெற்றி வாக்குச்சாவடியாக மாற்றுவது குறித்தும், நமது வாக்குச்சாவ டியில் வாக்குகளை அதிகமாக பெற தமி ழக அரசின் மகளிர் உரிமை திட்டம், விடி யல் பயணம், தமிழ் புதல்வன் உள்ளிட்ட திட்டங்களை மக்களிடம் கொண்டு செல் வது, மத்திய அரசின் பழிவாங்கும் நடவ டிக்கையால் தமிழகம் எந்த வகையில் பாதிக்கப்படுகிறது என்பதை பொதுமக்க ளுக்கு விளக்கி கூற வேண்டும் என எடுத்து கூறினர். மற்றும் தமிழக அரசின் பல் வேறு நலத்திட்டங்களை குறித்தும் பொது மக்களிடையே விரிவாக பேசினர்.

இந்நிகழ்ச்சியில் மீனவர்அணி அருள் பிரகாஷ், ஒன்றிய விவசாய அணி முனி ராஜ், ஒன்றிய இளைஞர் அணி மகேந்தி ரன், ஒன்றிய அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ரவி, கிளை செயலாளர் திம்மப்பன், வாக்குசாவடி முகவர்சரவணன், மாவட்ட பிரதிநிதி ஜெகநாதன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் வினோத்குமார் மற்றும் ராஜா, பழனி சாமி, சிகாமணி, குண்டன், மக்புல், பாதுஷா, மாணிக்கம், சதிஷ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



கூடலூர் அரசு போக்குவரத்து கழக கிளையில் ஓட்டுநர்கள் உறுதிமொழி ஏற்கு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நீலகிரி மாவட்டம் கூடலூர் அரசு போக்குவரத்து கழக கிளையில் ஓட்டுனர்களுக்கு விபத்துக்களை தடுக்க செல்போன் பயன்பாடு தவிர்க்க வேண்டும் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவது மிகவும் தவறு என்று கிளை மேலாளர் அறிவுறுத்தியுள்ளார்.